20th July 1964] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரி கல்வி இலாகா அதிகாரிக்குத் தெரிவித்திருக்கும்பொழுது, எப்படி அவருக்குத் தெரிய முடியாது என்று நினைக்கிறார்கள் கனம் மந்திரி அவர்கள். இந்தமாதிரி நடந்தது உண்மையா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, ஒரு 'நான்-அபிஷியல் கமிட்டி' அமைத்து உண்மையைத் தெரிந்து கொள்ளலாமே, இதைச் செய்ய முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் சொல்லியது பற்றி அவர்களிடம் விவரம் இருக்குமானால், உடனே எந்த அதிகாரி என்று எழுதிக்கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களை நான் அந்த விதமாக சம்பவம் நடந்ததா என்று விசாரிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இன்றைக்கு இம்மாதிரி பிழைகள் ஏற்படுவதற்குக் காரணமாக நம்முடைய விதிகளில் இருக்கிற குறைபாடுகளை நீக்குவதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம், இனி இந்த சம்பவம் ஏற்படாது என்பதை விளக்கிச் சொன்னேன். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவரைக் கண்டிப்பதற்கு, தண்டிப்பதற்கு சர்க்கார் ஒரு நாளும் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ ஒரு கல்வி அதிகாரி தவறு செய்தால், நாங்கள் போய் அவரைக் காப்பாற்றவேண்டும் என்ற அவசியம் இல்லை. அதுமாதிரி செய்கிற நோக்கம் கிடையாது. ஆனால், நம்முடைய சட்டத்தில் நியாயம் ஒன்று இருக்கிறது. யாராக இருந்தாலும் அவர் பேரில் தப்பு இருக்கிறது என்று ருசு ஆகாமல், அவர் பேரில் உண்மையாகவே தவறு இருக்கிறது என்று தெரியாமல், அவருடைய வாழ்க்கையைக் கெடுக்கக்கூடாது. தண்டனை கொடுக்கக்கூடாது. கனம் அங்கத்தினர் அவர்களிடம் விவரங்கள் இருந்தால், அவைகளை எழுதி அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned. 2–06 p.m.

VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

255. *Notification issued with G.O. Ms. No. 1469, Revenue, dated 21st May 1964 creating the additional check posts and change of location of one check post under the Madras General Sales Tax Act, 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959).]*

B. Reports, Notifications and other papers.

* 182. *The Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms (Amendment) Bill, 1964.*